சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
வெள்ளிக்கிழமை 29.10.2021
supeedsam.com
supeedsam@gmail.com

A.Puwanesh
Y.RAJ GOLDSCHMUCK
SPECIALIST IN JEWELLS MAKING & REPAIRING
Tel & Fax : 071 298 17 29
Handy : 079 590 91 98
Bruggwaldstasse 112 9300 Wittenbach Switzerland

# ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்போருளை ஊடகங்கள் வாயிலாக விமர்சிக்க முடியாது

## அதனுடைய நோக்கம் என்னவென்று அனைவருக்கும் தெரியும்; சிவநேசதுரை சந்திரகாந்தன்



(நமது நிருபர்)

ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்பொருளை நான் ஊடகங்கள் வாயிலாக விமர்சிக்க முடியாது. அதனுடைய நோக்கம் என்னவென்று அனைவருக்கும் தெரியும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணிக்கு ஜனாதிபதியால் ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...

# திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு நாங்கள் எதிராக இருப்போம்

## பிள்ளையான் எம்.பி.

ரக்ஸனா

வீட்டுக்கு வீடு சென்று அமைச்சர் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைப்பதென்பது விசித்தரமானதொரு நிகழ்வாக இருக்கலாம். காணி அற்றோருக்கு காணி வழங்குவது, காணி உறுதிப்பத்திரம் இல்லாதோருக்கு உறுதிப்பத்திரங்களை வழங்குவது, என்ற நோக்கத்தின் அடிப்படையில் காணி அமைச்சர் என்ற அடிப்படையில் காணி அமைச்சர் இதனை முன்னெடுத்து வருகின்றார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிக்குழு மட்டக்களப்பிற்கு விஜயம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப்பிரகடனத்திற்கு அமைவாக நாடளாவிய ரீதியில் நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இரசாயன உர பாவனையினை நிறுத்தி சேதனைப்பசளையினை ஊக்குவிக்கும் பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் நாடளாவிய

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்க காணிகளில் வசித்துவரும் ஒன்பது குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள்



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள வந்தாறுமூலை மேற்கு பிரதேசத்தில் கடந்த மூன்று தசாப்தகாலத்திற்கு மேலாக உறுதிப்பத்திரமின்றி அரசாங்க காணிகளில் வசித்துவரும் ஒன்பது குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று 28.10.2021 மாலை நடைபெற்றது.

காணியமைச்சர் எஸ்எம். சந்திரசேன இந்நிகழ்வில் பிரதம அதிதயாகக் கலந்து கொண்டார்.

பதில் பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மாவட்ட பணிப்பாளர் என். விமல்ராஜ் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த முப்பது மற்றும் நாற்பது வருடகாலதிற்கு மேலாக அரசாங்க காணிகளில் வசித்துவரும் இக்குடும்பங்கள் பல அரசியல்வாதிகள் வாதிகள்

02 ஆம் பக்கத்தில்...

## காரமுனை காணி விடயம்: வாகரை பிரதேச சபையில் கண்டன தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றம்

(நமதுநிருபர்)

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபையின் நாற்பத்தைந்தாவது சபை அமர்வு இன்றைய தினம் இடம்பெற்றது. இதன்போது சம காலத்திற்கு மிக அவசியமான தனிநபர் பிரேரணை ஒன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், தற்போதைய உறுப்பினருமான சிவஞானம் கோணலிங்கம் அவர்களினால் முன்வைக்கப்பட்டது.

இப் பிரேரணை தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

கடந்த 21ம் திகதியன்று வாகரைப் பிரதேச சபைக்குட்பட்ட மாங்கேணி காரமுனையில் சட்டவிரோதமாகவும், மிக இரகசியமாகவும் மாகாண காணி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளினால் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு குடியிருப்பு மற்றும் பயிற்செய்கை நடவடிக்கைகளுக்காக ஆறு ஏக்கர்கள் வீதம் அண்ணளவாக

02 ஆம் பக்கத்தில்...

## 1200 ஏக்கர் தமிழ் பிரதேச காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்க திட்டம்:புணானை காரமுனை பகுதிகளில் முன்னேடுப்பு

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பொலனறுவை எல்லைக் கிராமங்களான புணானை காரமுனை பகுதிகளில் 198 சிங்களக் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஆறு ஏக்கர் வீதம் மொத்தமாக 1200ஏக்கர் தமிழ் பிரதேச காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்கி திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தை மேற்கொள்வதற்கு காணி ஆணையாளர் அலுவலகம் ஊடாக பௌத்த துறவிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...

MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
குறைந்த கட்டணத்தில் வீட்டுக்காப்புறுதி
3 Säule ஆயுள்காப்புறுதி
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch

## ஜனாதிபதியே எமக்கு நீதியை பேற்று தாருங்கள் கண்ணீர் மல்கிய வேளிமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(பாறுக் ஷிஹான்)

6 மாதங்களாக எவ்வித தீர்வுகளும் இன்றி அலைக்கழிக்கப்படும் எமக்கு ஜனாதிபதியே நீதியை பெற்று தாருங்கள் என கண்ணீர் மல்கிய நிலையில் வெளிமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று ஒன்றுகூடிய 26 பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை

02 ஆம் பக்கத்தில்...



## ஒரு இலட்சம் வேலைவாய்ப்பிற்கான நியமன கடிதம் வழங்கி வைப்பு!



(எஸ்.எஸ். அமிர்தகழியான்)

நாடு முழுவதும் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு பட்டியலில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சிவனேசதுரை

02 ஆம் பக்கத்தில்...

கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.
Kamal GmbH
Kamal Kredit & Hypothek
Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero

# சேருநுவர மகாவலி வடக்கு காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சந்தேகநபர்கள் கைது

(எப்.முபாரக் )

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி வடக்கு காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சூரியபுர விஷேட பொலிஸ் அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து குறித்த இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்து ஸ்கேனர் இயந்திரம் மற்றும் மண்வெட்டி,கூடைகள் மற்றும் இரும்பு கம்பிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கேகாலை கொட்டியாகும்புர பகுதியைச் சேர்ந்த ஆர்.ஏ.மனோஜ்(41வயது)மற்றும்கந்தளாய்யுனிட் 2 பகுதியைச் சேர்ந்த எம்.டபிள்யூ.டீ.சன்ஜய (42 வயது) ஆகியோரேகைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட குறித்த இரண்டு சந்தேகநபர்களையும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும் விசேட அதிரடிப்படையினர் சேருநுவர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை குறித்த இரண்டு சந்தேகநபர்களையும் மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிக்குழு மட்டக்களப்பிற்கு

ரீதியில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அதற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு தங்குதடையின்றி சேதனை பசளை உள்ளிட்ட விவசாயத்திற்கு தேவையானவற்றை விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கான விசேட

கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பிற்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிக்குழு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உள்ளிட்ட மாவட்ட விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் தேசிய உரச் செயலக அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடலொன்றினை மேற்கொண்டுள்ளனர். குறித்த கலந்துரையாடலின்போது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் தேவைகளை கண்டறிந்து அவற்றிற்கான தீர்வினை விரைவுபடுத்துவது தொடர்பாகவும், விவசாயிகளுக்கு தேவையான சேதனை பசளையினை களஞ்சியப்படுத்தி அவர்களின் தேவைக்கு ஏற்றாற்போல் தங்குதடையின்றி விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு குறித்த பணிக்குழுவினர் அதிகாரிகளை பணித்துள்ளனர்.

அதே போன்று விவசாயிகளுக்கான இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினிகளுக்கு பதிலாக பாவிக்கக்கூடிய திரவ வகைகளான நனோ நைற்றஜன், வயோ மற்றும் ஓகானிக் திரவ வகைகள் போன்றவற்றை மாவட்ட விவசாயிகளுக்கு தடையின்று விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளை பணித்துள்ளனர்.

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பிற்கான நியமன கடிதம் வழங்கி

சந்திரகாந்தன் அவர்களது சிபாரிசின் பேரில் அறுநூறு பேருக்கான வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

மூன்று கட்டமாக வழங்கப்பட்ட இந்த வேலை வாய்ப்பில் இரண்டாம் கட்ட வேலை வாய்ப்புக்கான 124 நியமனக்கடிதம் புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டது.

அரச தொழில் வாய்ப்பு எனும்போது குறைந்தபட்ச கல்வித் தகமை என்பது முக்கியமானது. குறைந்தபட்சம் சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான அரச தொழில் வாய்ப்பு பெறுவது சாத்தியமானது.

ஆனால் இம்முறை அரசினால் கொண்டுவரப்பட்ட திட்டத்தில் '/

படிக்க தவறியவர்கள்'தொழில் வாய்ப்பினை பெறுவதை நோக்கமாகக் கொண்டு சாதாரண தரக்கல்விக்கு குறைவாக கல்வி கற்றோருகாக இந்த வேலை வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

இந்நிகழ்வானது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி காரியாலயத்தில் காலை 10.30 இடம்பெற்றது.

அபிவிருத்திக் குழு தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன், மற்றும் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# 1200 ஏக்கர் தமிழ் பிரதேச காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்க

இத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைப் பொறுத்தவரையில் இவர்களிடம் உள்ள வருடாந்த அனுமதிப்பத்திரம் 1982ம்ஆண்டு வழங்கப்பட்டுள்ளதாவும் இது வழங்கிய அதிகாரி குறிப்பிட்ட ஆண்டு காலங்களில் அத்திணைக்களத்தில் கடமை புரியவில்லையெனவும், கடந்த வாரம் இப் பிரதேசத்திலேயே காணி ஆணையாளர் நாயகத்தின் வழிகாட்டலின் பேரில் கிழக்கு மாகாணசபை காணி அலுவலகமும் இணைந்து இவர்களுக்கு காணி நடமாடும் சேவை நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

இது தொடர்பாக பலமுறை தொடங்கி ஆரம்பித்து கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் மீண்டும் முயற்சி எடுப்பதென்பது இப்பிரதேசத்தில் பாரிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை குடியேற்றும் நோக்கமாகக் கொண்டே கருதப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய சிங்களக்குடும்பங்களும் நூற்றுக்கணக்கான தமிழ் முஸ்லிம் குடும்பங்களும் வாழ்ந்து வரும்போது 1983,1985,198%,1990ம் ஆண்டு காலப்பகுதிகளில் இனக் கலவரங்கள் ஏற்பட்டு இடம் பெயர்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்பேசும் மக்கள் மீளக்குடியமரச் செல்லும் போது இக்காணி வனவளத்திணைக்களத்திற்கு உரியதெனவும் மகாவலிக்குரியதெனவும் வாக்காளர் இடாப்பு தேவையெனவும் அகதியாக வாழ்ந்ததற்கு ஆதாரம் தேவையெனவும் ஒப்பங்கள் இரத்துச் செய்யப் பட்டுள்ளதாகவும் தமிழ் மக்களுக்கு சொல்லும் அரசு சிங்கள மக்களிடம் ஏன் கேட்க முடியாது?

ஆறு,ஏழு சிங்களக் குடும்பங்கள் இருந்ததற்காக 200குடும்பங்களுக்கு போலியான ஒப்பங்களை வழங்கி ஆறு ஏக்கர் வீதம் காணிகளை வழங்குவதற்கு பௌத்த மத குருமார் முற்படுவதென்பதும் இப்பிரதேசத்தில் ஏற்கனவே திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் புணானை பகுதியில் பௌத்த மத குருக்களாலும் ஒருசில மறைமுகமான இனவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கோறளைப்பற்றுவடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொழும்பு பிரதான வீதியிலுள்ள புணானை இருந்து பொலனறுவை மாவட்ட எல்லைவரையும் பிரதானவீதி இரு ஓரங்களிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை மேற்கொண்டு தனிப் பிரதேசமாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றனவா? அரசஉத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் அரசியல் உயர் அழுத்தம் காரணமாக மௌனித்துள்ளனரா?

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு மு.கிழக்கு மாகாணசபை உறுப்பினர்பத்மநாபா மன்றம் ஈ.பி.ஆர்.எல்.எப் இரா.துரைரெத்தினம் கோரிக்கை முன் வைத்துள்ளார்.

# ஜனாதிபதியே எமக்கு நீதியை பெற்று தாருங்கள் கண்ணீர்

மேற்கொண்டு இவ்வாறு தெரிவித்தனர்.

இதன் போது குறித்த போராட்டத்தில் கைக்குழந்தைகளுடன் பங்கு பற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகயீனவிடுமுறை போராட்டம் ஒன்றினை மேற்கொண்டு பல்வேறு சுலோகங்களை ஏந்தி கோசங்களை எழுப்பியதை காண முடிந்தது.

குடும்பங்களை சீர்குலைத்து பிள்ளைகளை நிர்க்கதியாக்காதே ,மனிதாபிமானம் இல்லாத செயற்பாட்டை நிறுத்து , வேண்டாம் வேண்டாம் வெளி மாகாணம் வேண்டாம். ,அதிமேதகு ஜனாதிபதியே எங்களது பிரசச்சினையை கவனத்தில் எடுங்கள், சிங்கள மொழி தெரியாத எம்மை எமது மாவட்டத்தினுள் உள்வாங்கு, மேன்முறையீட்டு காலத்தை வழங்காமல் இழுத்தடிக்காதே, பல்நோக்கு செயலணி திணைக்களமே எமது பிரச்சிணைக்கு தீர்வினை பெற்று தாருங்கள் ,என பல்வேறு வாசங்களை மும்மொழிகளிலும் ஏந்தி குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்ட வெளிமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 26 பேரும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இணைப்பு செய்யப்பட்டு 1.1.2021 அன்று நிரந்திர நியமனத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்தனர்.இவ்வாறு உள்வாங்கப்பட்ட 26 பேர் எதுவித நேர்முகப்பரீட்சை இன்றி 22.04.2021 அன்று இரவோடு இரவாக மத்திய மாகாணம் ஊவா மாகாணம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அறிக்கை இட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டு அம்பாறை மாவட்ட செயலகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வெளி மாவட்டத்திற்கு சென்ற 26 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தங்குவதற்கு வசதி இன்றியும் மொழிப்பிரச்சினை காரணமாகவும் சிரமப்பட்ட நிலையில் மேன்முறையீட்டினை மேற்கொண்டனர்.இருந்த போதிலும் குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேன்முறையீடுகள் ஏற்று கொள்ளப்படவில்லை. ஆனால் ஏனைய திணைக்களத்தில் உள்வாங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களது மேன்முறையீடுகள் மறுபரிசீலணை மேற்கொள்ளப்பட்டு மாற்று இடங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் விரக்தி அடைந்த குறித்த பல்;நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தங்களுக்கும் மேன்முறையீடு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் அடிப்படை மனித உரிமையை மீறி நிர்வாகம் செயற்படுவதாக குற்றம் சாட்டினர்.

இதுவரை மேன்முறையீடுகள் இடமாற்றம் குறித்த பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்கள நிர்வாகம் மௌனம் சாதிப்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் பொறுப்பு வாய்ந்தவர்கள் இதற்கு தீர்வினை பெற்று தர ஆவண செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு இல்லையேல் குறித்த போராட்டமானது தீர்வு இல்லையேல் உண்ணாவிரத போராட்டமாக தொடர்ச்சியாக மேற்கொள்ள தாங்கள் உத்தேசித்திருப்பதாக ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

மேலும் போராட்டத்தை தற்காலிகமாக முடித்து கொண்டு மனித உரிமை ஆணைக்குழு பிராந்திய அலுவலகத்திற்கு சென்று முறைப்பாட்டினை வழங்கியுள்ளனர்.

குறித்த பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் குறித்து எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை குரல் கொடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதுடன் நுவரெலியா பதுளை மொனராகலை கண்டி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு 26 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்பு செய்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு நாங்கள் எதிராக இருப்போம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி சம்மந்தமான பிரச்சனைகள், பிணக்குகள் உள்ளன அதனை முடித்து வைப்பதற்கு நாங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் ஊடகங்களைப் பார்த்தால் சிங்கள மக்களுக்கு மாத்திரம் அமைச்சர் காணி உறுதிப்பத்திரம் வழங்குவது போன்றும் அதற்கு நாங்களும் துணைபோகின்றோம் என்றவித்தில் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் தவகல்களை பிளையாக வழங்கி தவறாக வழிநடாத்தப் படுகின்றார்கள்.

வீட்டுக்கு வீடு காணி உறுதிப்பத்திம் வழங்கி வைக்கும் நிகழ்வு ஒன்று வியாழக்கிழமை(28) மாலை 5 மணியளவில் மட்டக்களப்பு களுதாவளை விச்சுக் காலை வீதியில் அமைந்துள்ள குடியிருப்பு வீடொன்றில் நடைபெற்றது.

இதன்போது ஊறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்துவிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்.

எமது மாவட்டத்திலே, நாட்டிலே வாழ்கின்ற எல்லோருக்கும் காணி இருக்க வேண்டும். அனைவருக்கும் காணி வழங்க வேண்டும். மட்டக்களப்பிலே தேவநாயகம் ஐயாவின் காலத்தில் வலைவாடியில் சிங்கள மக்கள் இருந்தார்கள். ஏறாவூரிலே சிங்கள மக்கள் இருந்தார்கள், காணியைப் பற்றித் தெரிந்த நிருவாகிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இது தெரியும். அவர்கள் வரலாறு தெரியாமல் நடக்கமுடியாது. சிங்களம், தமிழ், முஸ்லிம் யாராக இருந்தாலும் காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்க வேண்டும் பிணக்குகள் வரும்போது அதனைத் தீர்த்துக் கொடுக்க வேண்டும். சமநிலையைக் குழப்புகின்ற திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு நாங்கள் எதிராக இருப்போம். எனவே பொறுப்பான ஊடகங்கள் எல்லாவற்றுக்கும் இனவாதத்தைக் கக்குகின்றது போல் நடந்துகொள்ளக்கூடாது.

மிகப்பெரிய கொரோனா தொற்றைத் தடுப்பதற்குப் போராடி, வருமானம் குறைந்திருக்கின்ற வேளையிலும் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தி, பல விமர்சனங்களைத் தாண்டி ஜனாதிபதி முன்னோக்கின் சென்று கொண்டிருக்கின்றார். ஆசிரியர் பிரச்சனை, தேசியம் கதைப்பவர்களும், வேட்டியை மடித்துக் கொண்டு உரப்பிரச்சனை தொடர்பில் கிளம்பியுள்ளார்கள். இவைகளையெல்லாம் முடிவுறுத்தி விளைச்சலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை எடுக்கின்றோம். நாம் எடுக்கின்ற முடிவு இயற்கைக்கும், நிலத்திற்கும், மக்களுக்கும், பாதிப்பை ஏற்படுத்தாததாக கொடையாகத்தான் நாம் பார்க்கின்றோம். வருத்தமில்லைத சமூகத்தை உருவாக்குவது, பசுமையான நிலத்தை உருவாக்குவது, இதற்கு மக்களும், ஊடகங்களும். ஒத்துழைப்புக்களை வளங்கவேண்டும். இது ஒரு விவசாய மாட்டம் விவசாயத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது. என அவர் இதன் போது தெரிவித்தார்.

# அரசாங்க காணிகளில் வசித்துவரும் ஒன்பது

மற்றும் அதிகாரிகளிடம் முறையிட்டபோதிலும் இதுவரைதமக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்படாதிருந்தது. எனினும் தற்போதைய அரசாங்க காலத்தில் உறுதிப்பத்திரங்கள்கிடைத்துள்ளதையிட்டுதாம் மகிழ்ச்சியடைவதுடன் ஜனாதிபதி மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிப்பதாக கூறினர்.

# காரமுனை காணி விடயம்; வாகரை பிரதேச சபையில்

200 பேருக்கு காணி அளவீடு செய்து கொடுப்பதற்காக மக்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவ்விடயங்களை அறிந்த அரசாங்கத்தினுடைய பங்காளிகளாக இருப்பவர்கள் இதனைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், அப்பிரதேச மக்களோடு களம் நுழைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள், பிரதேச சபையின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஏனைய பொதுமக்கள் என பலரும் காணி வழங்கப்பட இருந்த காரமுனைக்குச் சென்று மேற்கொண்ட எதிர்ப்பினால் தடுத்து நிறுத்த முடிந்திருந்தது.

இதில் பங்கு கொண்ட அத்தனை உள்ளங்களுக்கும் என்னுடைய சபை சார்பிலும், மக்கள் பிரதிநிதிகள் ஆகிய எமது சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்வாறான சட்டவிரோதமான, சட்டத்துக்குப் புறம்பான விடயங்களை நாங்கள் மக்களுக்காக எந்த நேரத்திலும் அவர்களுடன் நின்று போராட தயாராக உள்ளோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன் என்று தெரிவித்ததோடு, எமது மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பல கட்சிகள் இருக்கின்ற இந்த சபையிலே என்னால் இந்த பிரேரணையை முன் வைக்கப்படுகின்றது. இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரேரணையை ஆதரித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பிரதநிதித்துவப்படுத்தும் அந்த வட்டாரத்தை சேர்ந்த உறுப்பினர் அ.அன்ரன் அவர்கள், இப்பிரேரணையை வரவேற்று இந்த தீர்மானத்துக்கு தனது முழு ஆதரவையும் வெளிப்படுத்தியிருந்தார். அத்தோடு ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களும் இந்த சபையில் இதற்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும் எனவும், எதிர்காலத்தில் எமது பிரதேச சபைக்குட்பட்ட நில ஆக்கிரமிப்பை நாங்கள் ஒற்றுமையாக இருந்து கட்சி பேதமின்றி தடுத்து நிறுத்த வேண்டும் என்பதனையும் தெரிவித்திருந்தார்.

பின்னர் உரையாற்றிய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் சி.துரைராஜசிங்கம் அவர்கள், இப்பிரேரணையை ஆதரித்ததுடன், இந்தத் தீர்மானத்தை பிரதேச சபையில் கண்டன தீர்மானமாக நிறைவேற்றி, இதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை உரிய தரப்பினர்களுக்கு அனுப்பி இவ்வாறான விடயங்களை தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். சபை உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில் பிரதேசசபை உறுப்பினர் சி.கோணலிங்கம் அவர்களால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இப் பிரதேசசபையில் தவிசாளர் உட்பட மேலும் நான்கு உறுப்பினர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை சேர்ந்தவர்கள் ஐந்து உறுப்பினர்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் மூன்று உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள் இரண்டு உறுப்பினர்கள ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்கள் இரண்டு உறுப்பினர்கள் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி சுயச்சை குழுவைச் சேர்ந்தவர்கள் ஒருவர் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்பொருளை ஊடகங்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதிலளித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசியல் ரீதியான கருத்துக்களை அதிகமாக கதைக்க விரும்பவில்லை இது கோட்டாபய ராஜபக்ஷவின் முடிவின் பெயரிலேயே நியமிக்கப்பட்டுள்ளார். ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்பொருளை நான் ஊடகங்கள் வாயிலாக விமர்சிக்க முடியாது அதனுடைய நோக்கம் என்னவென்று உங்களுக்கு தெரியும் தானே.

நானும் வர்த்தமாணி மூலம் கோட்டாபயவின் முடிவினை பார்த்திருந்தேன். அவர் எந்த நோக்கத்திற்காக இவரை நியமித்தார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆகவே அவரின் நிலைப்பாட்டினை என்னால் விமர்சிக்க முடியாது என்னுடைய நிலைப்பாடு அரசாங்கத்துடன் சேர்ந்து மக்களுக்கான நியாயத்துடன் சேவை செய்வது.

ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை பற்றி கதைப்பதாக இருந்தால் விரிவாக கதைக்க வேண்டும் இது பல விமர்சனங்களை கொண்டு வரலாம் அதனால் நான் கதைக்க விரும்பவில்லை.

ஞானசார தேரர் பற்றி என்னைவிட ஊடகவியலாளர் உங்களுக்கு தெரியும் தானே எனவே இதில் நான் கூறுவதற்கு என்ன இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 5 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற மட்டு தலைமையக பொலிஸார் இடைநிறுத்தம்

(எருவில் துசி)

மட்டக்களப்பில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது முச்சக்கரவண்டி செலுத்திச் சென்றவரிடம் 5 ஆயிரம் ரூபா இலஞ்சமாக பெற்ற மட்டு தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவில் கடமையாற்றிவரும் 3 பேரை உடனடியாக தற்காலிகமாக கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து செங்கலடி பிரதேசத்திற்கு முகத்துவாரம் வீதி ஊடாக முச்சக்கரவண்டியில் சம்பவதினமான நேற்று (புதன்கிழமை) மாலை சென்று கொண்டிருந்த போது சவுக்கடி பாலத்திற்கு அருகில் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போக்குவரத்து பொலிசார் குறித்த முச்சக்கரவண்டியை நிறுத்தி சோதனையிட்ட நிலையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்று முச்சக்கரவண்டியை செலுத்துச் சென்றுள்ளதை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து குறித்த முச்சக்கரவண்டி சாரதியிடம் போக்குவரத்து பொலிஸார் சாரதி அனுமதிப்பத்திரமின்றி செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபோவதாகவும் அதனை செய்யாது அங்கிருந்து விடுவிக்க 10 ஆயிரம் ரூபா இலஞ்சமாக கோரியுள்ளனர்.

இதனையடுத்து 5 ஆயிரம் ரூபாதான் இருக்கின்றது என 5 ஆயிரம் ரூபாவை போக்குவரத்து பொலிசர் இலஞ்சமாக பெற்ற பின்னர் அவரை விடுவித்ததையடுத்து முச்சக்கரவண்டி சாரதி உடனடியாக மட்டு தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு சென்று தன்னிடம் 5 ரூபா இலஞ்சமாக போக்குவரத்து பொலிசார் பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில்; தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தலில் உடனடியாக பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி தலைமையில் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த போக்குவரத்து பிரிவில் கடமையாற்றிவந்த 3 பொலிஸாரையும் உடன் அமுலுக்குவரும் வரையில் நேற்று புதன்கிழமை உடனடியாக கடமையில் இருந்து இடைநிறுத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# பிரதேச செயலக ரீதியாக இடம்பெற்றுவரும் உரச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல்



( எஸ்.எஸ். அமிர்தகழியான்)

பிரதேச செயலக ரீதியாக விவசாயிகளின் நன்மைகருதி அரசினால் முன்னெடுக்கப்பட்டுவரும் உரச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்தரையாடலின் போது பிரதேச செயலக ரீதியாக சேதனைப்பசளை உரம் தயாரிக்கும் செயற்பாடானது விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ரீதியாக அங்குள்ள சமூக மட்ட அமைப்புக்களைக் கொண்டு சேதனைப்பசளையினை தயாரிப்பதற்கான செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை சேதனைப் பசளை உரத்தினை உற்பத்தி செய்யும் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்பு மானியமாக கிழக்கு மாகாண ஆளுனர் ஊடாக 9 மில்லியன் நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அந்த நிதியினை பிரதேச செயலக ரீதியாக கிடைக்கப்பெற்றுள்ள சேதனைப்பசளை தயாரிக்கும் முயற்சியாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் முதல்கட்டமாக 8 பிரதேச செயலக பிரிவுகளிற்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், திருமதி.நவரூபரஞ்ஜனி முகுந்தன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சந்திவெளியில் புதிய பொலிஸ் நிலையம் திறப்பு








(ஏறாவூர் நிருபர் நாஸர், ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 4 பொலிஸ் நிலையங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் முதலாவதாக மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையின் சந்திவெளி பிரதேசத்தில் வியாழக்கிழமை 28.10.2021 புதிய பொலிஸ் நிலையம் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்தியற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தினேஸ் கருணாநாயக்க மட்டக்களப்பு கோட்டத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எச். சுதத் மாரசிங்ஹ உட்பட மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உட்பட அதிகாரிகளும் சமயத் தலைவர்களும் சமூக முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

புதிய பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கான அனுமதியை பொலிஸ் மா அதிபர் வழங்கியதையடுத்து இந்த புதிய பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பொலிஸ் நிலையங்களின் சம அந்தஸ்தில் இது 13வது பொலிஸ் நிலையமாகும்.

30 பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சேவையைத் தொடங்கவுள்ள புதிய சந்திவெளி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக எம். சுதர்ஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தினால் சேவையாற்றப்பட்டு வந்த நிலையில் சந்திவெளி என பிரிக்கப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலைய பிரதேசம் 12 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 33 ஆயிரம் மக்களுக்கு சேவை வழங்கும் என்று ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.டபிள்யூ கே. ஜயந்த தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் கீழ் புணாணை எனுமிடத்தில் தற்போது இயங்கி வரும் பொலிஸ் சோதனைச் சாவடி புணானை பொலிஸ் நிலையமாகவும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் கொக்குவில் பொலிஸ் சோதனைச் சாவடியாக இயங்கிவரும் சோதனைச்சாவடி கொக்குவில் பொலிஸ் நிலையமாகவும் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் இயங்கி வரும் கர்பலா பொலிஸ் சோதனைச் சாவடி தாளங்குடா பிரதேச பொலிஸ் நிலையமாகவும் மேலும் 3 பொலிஸ் நிலையங்கள் இவ்வருட இறுதிக்குள் திறக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு பிராந்தியற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தினேஸ் கருணாநாயக்க தெரிவித்தார்.

# களுதாவளையில் காணி உறுதிப் பத்திரம் வழங்கி வைப்பு

(ரக்ஸனா)



வீட்டுக்கு வீடு காணி உறுதிப்பத்திம் வழங்கி வைக்கும் நிகழ்வு ஒன்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் மட்டக்களப்பு களுதாவளை விச்சுக்காலை வீதியில் அமைந்துள்ள குடியிருப்பு வீடொன்றில் நடைபெற்றது.

இதன்போது காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, மட்டக்களப்பு மவாட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மவாட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரககுமார், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் நிலந்த விஜயசிங்க, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் சேரகுமாரன் விமலாராஜ், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, களுதாவடிளியில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியில் குடியிருந்தவர்களுக்கு இதன்போது காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கப்பட்டன.

# தேசிய உற்பத்தித்திறன் விருதின் 2019 ஆண்டிற்கான களமதிப்பீட்டு பணிகள் நிகழ்நிலை ஊடாக முன்னெடுப்பு!!

( எஸ்.எஸ். அமிர்தகழியான்)



தேசிய உற்பத்தித்திறன் விருது 2019 இற்காக அரச துறையில் மாவட்ட செயலகங்களுக்கிடையிலான போட்டிகள் இடம்பெற்றுவரும் நிலையில் கொவிட் சூழ்நிலை காரணத்தினால் அதற்கான களமதிப்பீட்டு பணிகள் நிகழ்நிலை ஊடாக இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கான களமதிப்பீட்டு பணிகள் நிகழ்நிலை ஊடாக வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சுற்றுச்சூழல் அக மற்றும் புற சுத்தம், வாடிக்கையாளர் திருப்தி, வாடிக்கையாளர் பிரச்சினைகளை அறிக்கையிடும் முறை, கொவிட் 19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதை உறுதிப்படுத்தல், நேர முகாமைத்துவம், வாகன தரிப்பிட ஒழுங்கு, கழிவுப்பொருள் முகாமைத்துவம் உள்ளிட்ட உற்பத்தித்திறன் செயற்பாட்டுக்கான விடயங்களை திறம்பட செயற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கல்விச் சேவை பாராட்டடி கௌரவிப்பு

(திருக்கோவில் நிருபர்)

திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளரும்தற்போதய கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருமான திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயம் அம்மணியின் கல்விச்சேவையினைபாராட்டி திருக்கோவில் வலயக் கல்வி அதிகாரிகள் பொன்னாடை போர்த்தி கௌரவமளித்துள்ளனர்.



இந்நிகழ்வு திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரனின்தலைமையில் வியாழக்கிழமை(28) திருக்கோவில் வலயக்கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்று இருந்தன.

இவ் கௌரவிப்பு விழாவில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நலகுலேஸ்வரி புள்ளநாயகம் அம்மணிக்கு திருக்கோவில் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு இருந்ததுடன் திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தில் அம்மணியின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டு இருந்த நிலைபேரான கல்வி மற்றும் நிருவாக ரீதியான அபிவிருத்திகள் தொடர்பாக நன்றிகள் தெரிவித்து விசேட உரைகளும்; இடம்பெற்று இருந்தன.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அம்மணிக்கு திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அதிகாரிகளால் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டு இருந்தன. இதேவேளை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்று இருந்தன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரன் பள்ளநாயகம் திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் மற்றும் திருக்கோவில் வலயக் கல்வி அலவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர்.

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

# கந்தளாய் நன்னீர் குளத்தில் இருபதாயிரம் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு

(எப்.முபாரக்)



கந்தளாய் நன்னீர் குளத்தில் இருபதாயிரம் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரலவின் தலைமையில் நடைபெற்றது.

நன்னீர் குளத்தின் மீன் வளத்தை பெருக்குவோம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் இருபதாயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் கந்தளாய் நன்னீர் குளத்தின் மீன் வளர்ப்பு செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல, மாவட்ட கடற்றொழில் பரிசோதகர், பிரதேச கடற்தொழில் பரிசோதகர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மீனவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டார்கள்.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# நீதிமன்றங்களை அவமதித்து, சட்டத்தை மதிக்காதவரை நியமித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

**மாளிகைக்காடு நிருபர்**

ஒரே நாடு ஒரே சட்டம் இயற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பொது பல சேனாவின் செயலாளர் கலக்கட அத்தே ஞானசார தேரர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் எனும் இந்த தீர்மானத்தின் ஊடாக நாட்டில் இது வரை பேணப்பட்டு வந்த மரபுகளும், மாண்புகளும் உடைத்தெறியப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கப்பட்ட சட்டங்களை குறியாக வைத்து ஒரே நாடு ஒரே சட்டம் எனும் இந்த கொள்கை கடந்த நல்லாட்சியில் சமர்ப்பிக்கப்பட்டு இப்போதும் பேசுபொருளாக இருந்து வரும் விடயமாக உள்ளது. வெளிப்படையாக கூறுவதாயின் தமிழ் முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து தெற்கிலுள்ள பல அரசியல்வாதிகள் பேசிவந்தனர்.

ஆனால் இந்த விடயம் நாடு கொரோனாவில் சிக்கி இக்கட்டான நிலையில் மாட்டிக்கொண்டு தவிப்பதுடன் பொருளாதார நெருக்கடியிலும் சிக்கியுள்ள இந்த காலப்பகுதியில் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும், இது நாட்டில் சட்டம் இயற்றும் துறை சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை சட்ட வரைஞர் திணைக்களம், சட்டமேதகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என பலரும் இருக்கத்தக்கதாக இப்போது இந்த விடயத்தை தலைமையேற்று வழிநடத்த சட்டம் சம்பந்தமான எவ்வித அறிவுமில்லாத பல வழக்குகளில் குற்றவாளியாக நீதிமன்றம் தீர்ப்பளித்து தண்டனை பெற்ற ஒருவரான மதப் பிரிவொன்றின் போதகரை நியமித்து ஒரே நாடு ஒரே சட்டம் எனும் முக்கிய வரைபை கட்டமைக்கும் பொறுப்பை கையளித்திருப்பதை எவ்விதத்திலும் அறிவு சார்ந்த சமூகமும், நாட்டில் நிலையான சமாதானத்தை விரும்பும் மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இந்த நாட்டின் இன ஐக்கியத்திற்கு



எதிராக யார் பேசிவருகிறாரோ, குழப்பவாதியாக மக்களால் யார் அடையாளப்படுத்தப்படுகிறாரோ அவரையே இங்கு முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். அண்மையில் கூட அவர் மதநிந்தனையும், இறை நிந்தனையும் செய்து சமூகங்களுக்கிடையில் மனக்கசப்புக்களை தோற்றுவித்தவர். அவரை இந்த பதவிக்கு நியமித்திருப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்பதுடன் இந்த நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆணித்தரமாக தெரிவித்து கொள்கிறேன். இது தொடர்பிலான பலத்த கண்டனங்களை அரசாங்கத்தின் பொறுப்புதாரிகளுக்கு தெரிவிப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்கமானது அத்தியாவசியப் பொருட்களின் விலையினை அதிகரிப்பதனால் மக்களின் பொருளாதார உட்கட்டமைப்பு பின்னடைவு

**(இ.சுதாகரன்)**



அன்றாடம் கூலித்தொழில் செய்து மிகக் குறைந்தளவான வேதனத்தினைப் பெறுகின்ற பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் அவலமான நிலையினை சிந்திக்காது அரசாங்கமானது அத்தியாவசியப் பொருட்களின் விலையினை நாளுக்கு நாள் இருமடங்காக உயர்த்துகின்ற செயற்பாட்டினை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகவுள்ளதாகவும் இது தொடர்பாக அரசாங்கமானது மக்களின் நலன் கருதி செயற்பட வேண்டும் என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நன்னிறைவில் மிக முக்கியமான விடயமாகத் திகழும் உழைப்பு மூலதனம் கல்வி ஆகிய மூற்றிலும் பின்னடைவான தன்மை காணப்படுமாயின் நாட்டின் அபிவிருத்தி இலக்கில் பாரிய பின்னடைவு ஏற்படும் அவ்வாறான நிலைமையிலிருந்து நாட்டினை கட்டியெழுப்ப வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமையானது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பல்லாயிரக் கணக்கான மக்களின் வாழ்வில் பாரிய பின்னடைவான தன்மையினை ஏற்படுத்தியுள்ளது.அரசாங்க துறையில் தொழில் புரிகின்ற உத்தியோகத்தர்கள் தமது வேதனத்திற்கு ஏற்ற வகையில் வாழ்க்கையினை ஓரளவேனும் கொண்டு செல்லக் கூடிய நிலையில் அன்றாடம் கூலித் தொழில் மூலமாக மிகக் குறைந்தளவான வேதனம் பெறுகின்ற மக்களின் நிலையினை சிந்திப்பார் யாரும் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையினை துரிதமாகக் குறைத்து அடிப்படை வசதிகளற்ற மக்களின் வாழ்வினை முன்னேற்றுவதற்கு அரசாங்கமானது நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டுமென அவர் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

# வெருகல் பிரதேச செயலக பிரிவுக்கான வரவு-செலவுத்திட்ட முன் மொழிவுகள்






**அ . அச்சுதன்**

2022-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பிரதேச செயலக ரீதியாக பெற்றுக் கொள்ளுகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலக பிரிவுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெறல் பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமாகிய கபில அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி அவர்கள் இன மத மொழி வேறுபாடின்றி அனைத்து இனமக்களதும் அபிவிருத்தி தொடர்பில் கூடிய கரிசனை கொண்டு அதற்காக பாரிய நிதி உதவிகளை மேற்கொண்டு வருகின்றார். கொவிட் காரணமாக கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் நாங்கள் எதிர்பார்த்த அபிவிருத்தி விடயங்களை அடைய முடியாமல் போயிருந்தது .இருப்பினும் கொவிட் டிற்கு மத்தியில் திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக இதன் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரல தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்களில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. மாவட்டத்தில் ஏராளமான வளங்கள் காணப்படுகின்றது. எனவே குறித்த வளங்களை பயன்படுத்தி மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க சகல துறைகளிலும் முன்னேற்றம் கொண்ட மாவட்டமாக மாற்றியமைப்பதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி உட்பட அரசாங்கம் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. இவற்றின் மூலம் மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருமானத்தை அதிகரிப்பது நோக்கமாக காணப்படுகின்றது .வெருகல் பிரதேசத்தில் புரையோடிப் போய் இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு அரசாங்க அதிபர் அடிப்படையில் தாம் மிகுந்த

ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருவதாகவும் அரசியல் தலைமை மற்றும் ஏனையவர்களும் ஒன்றிணைந்து செயற்படல் மூலம் இப்பிரதேசத்தின் தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடியதாக அமையும் என்று இதன் போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வெருகல் பிரதேச சபை தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ,ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்களுடைய முன்மொழிவுகளை முன்வைத்தமை சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலபதி, வெருகல் பிரதேச செயலாளர் மொகமட் கனி , வெருகல் பிரதேச சபை தவிசாளர் , பிரதேச சபை உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் ,கிராம முன்னேற்றச் சங்க தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# காரைமுனை குடியேற்றச் செயற்பாடு இனவாத முரண் அரசியலின் பாய்ச்சலாகவே பார்க்கப்படுகிறது - ஞா.ஸ்ரீநேசன்



**இ.சுதாகரன்**

தற்போது மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் சிங்களக் குடியேற்றச் செயற்பாடு ஆரம்பித்துள்ளது. அதிலொன்றுதான் இரகசிய முறையில் முன்னெடுக்கப்பட இருந்த வாகரைப் செயலகப் பிரிவுக்குப்பட்ட காரமுனைக் குடியேற்றத் திட்டமாகும். காரைமுனை குடியேற்றச் செயற்பாடு இன முரண்பாடுகளை உருவாக்கும் இனவாத அரசியலின் பாய்ச்சலாகவே பார்க்கப்படுகிறது என கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

காரமுனை சிங்களக் குடியேற்றத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் பெரும்பான்மை இனத்தவர் என்ற வகையில் சிங்கள இனம் சார்பான விடயங்களைக் கச்சிதமாக கையாள,வஅதற்கான அதிகாரப் பின்னணிகளை கிழக்கு மாகாண ஆளுனர் செய்து வருகிறார். அந்த வகையில் கடந்த மாசி மாதத்தில் இருந்து மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துடன் இணைத்து வெளியில் வராதவாறு குடியேற்ற முன்னெடுப்புகள் இடம் பெற்றுள்ளன.

1983 காலப்பகுதியில் மட்டக்களப்பில் வாழ்ந்ததாகக் கூறி 200 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் காணியாணையாளரால்

முன்னெடுக்கப்பட்ட போது தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்ப்பையடுத்து குடியேற வந்தவர்கள் அவ்விடத்தினை விட்டு விரைவாக வெளியேறினர். அதாவது மட்டக்களப்பு வாக்காளர் பட்டியலில் இல்லாதவர்கள் போலியான பல ஆவணங்களுடன் காரைமுனையில் வாழ்ந்தவர்கள் போன்று குடியேறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்ட நிலை கைவிடப்பட்டது.

கிழக்கின் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாக சிங்கள பௌத்த மயமாக்கல் நிலை நிறுத்தப்படுகின்றன. மாதவனை, மயிலத்தமடு, கெவுளியாமடு, காரைமுனை, வடமுனை, நெளுக்கல் மலை என்ற வகையில் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்களைச் செய்கின்ற செயற்பாடுகள் மட்டக்களப்பில் அரங்கேறுகின்றன.

பௌத்த சிங்களத் தலைவர்கள் பல்லின மக்களை சிந்திக்காமல் சிங்கள மக்களை மாத்திரம் கவனத்திற்கொண்டு சட்ட திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துகிறார்கள். குறிப்பாகத் தமிழ்பேசும் மக்கள் செறிவாக வாழும் வடக்கு - கிழக்கில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலமாக சிங்கள சமூகத்தவர்களின் அரசியலாதிக்கத்தை நிலைநாட்ட விரும்புகிறார்கள்.கடந்த ஆட்சிக்காலத்தில் தொட்டது பட்டது எல்லாவற்றுக்கும் ஆர்ப்பாட்டம் என்று மக்களை ஏமாற்றிய பெயரளிகள் இப்போது ஆளுங்கட்சிக்குள் வாயடைத்து மௌனிகளாகவும் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவும் அரசாங்கத்தின் ஏவலாளிகளாகவும் மாறியுள்ளனர்.

மட்டக்களப்புக் காணிகள், மண் வளம் அபகரிக்கப்படுகின்றபோது தம்பிகள், எம்பிகள் தலைமறைவாகி விடுகிறார்கள். அதன் பின்னர் தம்மைத்தாமே கிழக்கு மண்ணின் இரட்சகர்கள் என்று பிரகடனம் செய்கிறார்கள்.

மறைமுகமாக அரசாங்கத்தின் ஏவலாளிகள் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்களுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டார்கள். அடிப்படைவாத அதிகார வர்க்கத்துடன் இணைந்த எந்தத் தமிழ்ப்பிரதிநிதியும் தமிழ்ச் சமூகங்களைப் பாதுகாத்ததாக வரலாறு இல்லை. அரசாங்கத்தின் எடுப்பார் கைப்பிள்ளைகள் பதவி பெற்று பணம் உழைத்துக் கொண்டு தமிழ் இன மக்களைப் பலிக்கடா ஆக்கியுள்ளனர் என்றார்.

# இருநாடு உள்ளதையே ஜனாதிபதி செயலணி உறுதிப்படுத்துகிறதா ? பா. அரியநேத்திரன்



**இ.சுதாகரன்**

ஒரு நாடு ஒரு சட்டம் எனும் பெயரில் ஜனாதிபதி செயலணியால் உருவாக்கப்பட்ட உறுப்பினர்களில் தமிழர்கள் எவரும் இடம்பெறாமை தமிழர்களுக்கு தனிநாடு உள்ளது என்பதையே கோடிட்டுக்காட்டுகிறது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், இலங்கை தமிழரசு கட்சி பட்டிருப்பு தொகுதித் தலைவருமான பா. அரயநேத்திரன் தெரிவித்தார்.

ஒரு நாடு ஒரு சட்டம் தொடர்பான செயலணி தொடர்பாக மேலும் கருத்துக் கூறுகையில்,

சர்ச்சைக்குரிய ஞானசார தேரரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த செயலணியில் தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்காமை தமிழர்களுக்கு ஒரு நாடு இலங்கையில் இல்லை அவர்களுக்கு தனி நாடு இருக்கிறது என்ற எண்ணமே இதன்மூலம் சொல்லாமல் சொல்லப்பட்டுள்ளது. இந்த செயலணியில் 13 பேரில் ஒன்பது சிங்களவரும், நான்கு முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டுள்ளது தமிழர்களை முற்றாக புறம்தள்ளும் செயலாகவே பார்க்க முடிகிறது. இந்த செயலணி மீது நம்பிக்கையில்லை என்பது ஒருபுறம் இருக்க மூன்று இன மக்கள் வாழும் ஒரு நாட்டில் ஒரு இனத்தை புறக்கணித்து எப்படி ஒரு நாடு சட்டத்தை உருவாக்க முடியும்.

தமிழுக்கும் தமிழருக்கும் என ஒரு அடையாளம் இலங்கையில் பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகையில், ஒரு நாடு ஒரு சட்டம் என்பதன் அர்த்தம் என்ன? இலங்கை ஒரு நாடு அல்ல. அது சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், மலையக மக்கள் மேலும் பல சிறிய இன மக்கள் வாழும் பல்லின பண்பாடு அடையாளங்களை கொண்ட நாடு.

வடக்கு கிழக்குத் தாயகம் என்பது தமிழ்மக்களின் பூர்வீக வரலாறுகளை கொண்ட நிலமாக கருதப்பட்டதனால் யாழ்ப்பாணத்தில் 1707, ஆம் தேசவழமை சட்டமும் மட்டக்களப்பில் 1876 இல் முக்குவர் சட்டமும் ஆங்கிலேயரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.அப்போது ஆங்கிலேயரான சி.விறிற்றோ முக்குவர் சட்டத்தை நூலாக எழுதி வெளியிட்டு ஆங்கிலேயரால் அங்கீகாரம் பெற்றார். எனினும் இலங்கை சுதந்திரம் அடைந்த1948, க்கு பின்னர் முக்குவர் சட்டம் மறைந்து விட்டது. ஆனால் யாழ்ப்பாணம் தேசவழமைச்சட்டம் இன்றும் சட்ட நடைமுறையில் இருந்து வருகிறது. இது போலவே கிழக்கில் முஸ்லிம்களின் மத நம்பிக்கை அடிப்படையில் இஸ்லாமிய சரிஆ சட்டம் இலங்கையின் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எனவே, இலங்கையில் இன மத குல ரீதியான சட்டங்கள் பல்நெடுங்காலமாகவே நடைமுறையில் இருந்து வந்ததை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தற்போது ஒரு நாடு ஒரு சட்டம் எனும் தொடிப்பொருளில் மாற்றங்களை கொண்டுவரும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயலணியானது ஆரம்பத்திலேயே தமிழர்களின் கருத்துக்களை முற்றாக புறக்கணிக்கும் செயலணியாகவே செயல்படும் என்பதையே இந்த 13,பேர் கொண்ட குழுவில் தமிழர் எவரும் இடம்பெறாமையை காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

# கட்டுக்கலை தோட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கி வைப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

கடந்த ஒரு மாத காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தில் வாழும் 119 குடும்பங்களுக்கு வன்னிஹோப் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் மலையக சமூக அபிவிருத்தி பேரவையால் உலர் உணவுப் பொருட்கள் 28.10.2021 வியாழக்கிழமை நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

# இதுவரையில 60 ஆயிரம் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளது

## காணி அமைச்சர் சந்திரசேன

(ரக்ஸனா)

ஒரு இலட்சம் காணி உறுதிகள் வழங்கும் இலக்கை அடைய முடியாவிட்டாலும் இதுவரை எம்மால் 60 ஆயிரம் காணி உறுதிகள் வழங்க முடிந்திருப்பது ஒரு பாரிய வெற்றியாகும். என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தின்கீழ் வீட்டுக்கு வீடு காணி உறுதிப்பத்திம் வழங்கி வைக்கும் நிகழ்வு ஒன்று வியாழக் கிழமை(28) மாலை 5 மணியளவில் மட்டக்களப்பு களுதாவளை விச்சுக்காலை வீதியில் அமைந்துள்ள குடியிருப்பு வீடொன்றில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்து விட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் ;

வருடக்கணக்காக தங்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியாமலிருந்த காணி உறுதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை இப்பொழுது ஆரம்பித்து அதனை வழங்கி வருகின்றோம்.

எமது நாட்டிலுள்ள சிங்கள தமிழ் முஸ்லிம் உட்பட சகல சமூகத்தவர்களுக்கும் உரிய பிரதேசங்களுக்குச் சென்று நிரந்தர வதிவிடத்தை உறுதி செய்யும் விதமாக அனுமதிப் பத்திரங்க



ளைப் பெற்றுக் கொடுக்கும்படி காணி அமைச்சை ஜனாதிபதி ஒப்படைத்த பின்பு அறிவுறுத்தியிருந்தார்.

அதற்கமைய இன்றைய தினம் காலை திருகோணமலை மாவட்டத்திற்கும் மாலை மட்டக்களப்பு மக்களுக்கும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணிகளுக்கு காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வருகின்றோம்.

காணி ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணிகளுக்கும் அவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக கிராமத்திற்கு வந்து வீட்டுக்கு வீடு வந்து இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றோம்.

இவ்வுறுதிப்பத்திரம் வீட்டுக்கு வீடு எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றது. இது முன்னர் கச்சேரியில் வைத்து இடம்பெற்று வந்த ஒரு நடைமுறையாகும் ஆனால் அதனை நாம் கிராமத்திற்கு வந்து மக்களின் காலடியில் வைத்து இந்தச் சேவையை வழங்கி வருகின்றோம்.

சகல கிராமங்களுக்கும் என்னால் வரமுடியாவிட்டாலும் அதனை அடையளப்படுத்தும் முகமாக அரசியல் அதிகாரங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் அமைப்பாளர்கள் உட்பட அனைவரும் கிராமங்களுக்குச் சென்று இதனை வழங்கி வருகின்றோம்.

சுபீட்சத்தின் நோக்கு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக ஜனாதிபதி கூறிய விடயம் 2021ஆம் ஆண்டு எமது நாட்டு மக்களுக்கு ஒரு இலட்சம் காணி உறுதிகள் வழங்கவேண்டும் என்பதேயாகும்

நான் அதனை நடைமுறைப்படுத்தத் தயாராகும்போது எமது காணி ஆணையாளர் நாயகமும் காணி அபிவிருத்தி ஆணைக்குழுவும் தலைவர் அவர்களது ஊழியர் குழாம் ஆகியோர் பணி செய்து வந்த நேரத்தில் கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவத் தொடங்கியிருந்தது.

அதனால் எமது நில அளவைத் திணைக்களமும் கச்சேரியும் பிரதேச செயலகங்களும் என்று எல்லாமே மூடப்பட்டிருந்தன.

அதன் காரணமாக ஒரு இலட்சம் காணி உறுதிகள் வழங்கும் இலக்கை அடைய முடியாவிட்டாலும் இதுவரை எம்மால் 60 ஆயிரம் காணி உறுதிகள் வழங்க முடிந்திருப்பது ஒரு பாரிய வெற்றியாகும். என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கு பிரதமர் பாராட்டு

இந்நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக்கான சீன தூதுவர் சீ.ஷென்ஹொன் அவர்களின் முன்னிலையில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தனது பாராட்டினை தெரிவித்தார்.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை சீன தூதுவர் சீ.ஷென்ஹொன் அவர்கள் புதன் கிழமை (27) அலரி மாளிகையில் சந்தித்தபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமையை கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசாங்கத்திற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் கௌரவ பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு வாழ்த்து தெரிவித்த சீன தூதுவர் சீ.ஷென்ஹொன் அவர்கள்இ அதற்கு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சீன மக்கள் வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி இடையிலான 10 பில்லியன் சீன யுவான் மதிப்பிலான இருதரப்பு நிதி பரிமாற்ற ஒப்பந்தமானதுஇ உலகளாவிய முதலீட்டாளர்களின் உணர்வை வலுப்படுத்தவும்இ இலங்கையின் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் உதவும் என சீன தூதுவர் இதன்போது வலியுறுத்தினார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 65ஆண்டு நிறைவு மற்றும் இரப்பர் அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமை ஆகியவற்றை குறிக்கும் 2022ஆம் ஆண்டானதுஇ இலங்கை - சீன இருதரப்பு உறவின் மிக முக்கியமான ஆண்டாக விளங்கும் என சீன தூதுவர் சீ.ஷென்ஹொன் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த மாதம் வரவிருக்கும் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு சீன ஜனாதிபதி மற்றும் சீன பிரதமரின் சார்பில் சீன தூதுவர் முன்கூட்டிய பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்தார; என பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# அக்கரைப்பற்று பனங்காடு ஸ்ரீ நாககாளி அம்மன் ஆலய பிரதமகுரு உள்ளிட்ட பூசகர்கள் ஐவர் கௌரவிப்பு





(வி.சுகிர்தகுமார் )

அக்கரைப்பற்று பனங்காடு ஸ்ரீ நாககாளி அம்மன் ஆலய பிரதமகுரு உள்ளிட்ட பூசகர்கள் ஐவர் ஆலய நிருவாகத்தினரால் சிறப்பு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அம்மனது வருடாந்த உற்சவ திருவிழா மற்றும் சக்தி விழாவின் எட்டாம் சடங்குடன் நிறைவுற்ற இன்றைய நாளில் பூசகர்களது இறைசேவையினை பாராட்டி இவ்வாழ்த்துப் பத்திரங்களும் பட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கமைவாக அம்மன் ஆலய பிரதம குருவும் ஆலயத்தை அமைத்துக் கொடுத்தவருமான சிவசக்தி உபாசகர் சிவஸ்ரீ வி.நடராஜா 'இறைபணித்திலகம் தேவிகான வினோதன்' எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சக்தி விழாவின் தீமிதிப்பு சடங்கினை வருடந்தோறும் நடாத்தி வரும் உற்சாடன பானு தேவி பூ;ஜா துரந்தரர் சக்தி பாவனர் சிவத்திரு இ.யோகானந்தம் மற்றும் உதவி பூசகர்களான இளஞ்சுடர் அம்மன் திருத்தொண்டர் சோ.கஜேந்திரன் இளஞ்சுடர் அம்மன் திருத்தொண்டர் யோ.மோகன்ராஜ் ஆகியோர்களுக்கு வாழ்த்துப்பாவும் வழங்கப்பட்டது. மேலும் ஆலயத்தின் உதவி பூசகர் அம்மன் திருத்தொண்டர் மா.ஆனந்தஜோதி சக்தி வேந்தர் எனும் சிறப்பு பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்பு நிகழ்வில் ஆலய நிருவாகத்தினர்உள்ளிட்ட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் பல்நோக்கு கூட்டுறவு சங்க பல்பொருள் விற்பனை நிலையம் திறப்பு



(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் 50 வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்தில் புதிய பல்பொருள் விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது

சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்க நிர்வாகத்தலைவர் எம்.எம். உதுமா லெப்பையின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பல்நோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்தை திறந்து வைத்தார்.

கல்முனை பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலாதேவி உதயராஜா கௌரவ அதிதியாக கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர். எம். அஸீம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள பிராந்திய அதிகாரிகள், அம்பாறை மாவட்ட ஏனைய கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்க இயக்குனர் சபை உறுப்பினர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது ஜும்மாப்பள்ளி வாசல் பேஸ் இமாம் எம்.ஐ.எம். ஆதம்பாபா (ரஸாதி)வின் துஆ பிராத்தனையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்க தலைவர் எம்.எஸ்.எம். முபாரக் முதலாவது வாடிக்கையாளராக கலந்து கொண்டு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்

# கருங்காலிமோட்டை கிராம மக்களின் பிரச்சனைகளை நேரில் கேட்டறிந்தார் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல்

(வாஸ் கூஞ்ஞ)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கருங்காலி மோட்டை மக்கள் சிலர் அவ் பகுதியில் எதிர்நோக்கி வரும் பிரச்சனைகளை நேரில் கண்டறிந்து அவற்றிற்கான விமோசனத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் அவ் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கருங்காலி மோட்டை கிராம மக்கள் சிலர் தங்களுக்கு சொந்தமாக வீடு காணி இல்லாத நிலை மற்றும் நடைபாதை வாழ்வாதாரம் மற்றும் அரச காணியை தனியார்கள் பிடித்து வைத்திருப்பது போன்ற பல பிரச்சனைகள; அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இவற்றை கவனத்தில் எடுத்துக் கொண்ட மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் வியாழக் கிழமை (28) காலை 11 30 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டெனிசியஸ் கனியூட் அரவிந்தராஜ் சகிதம் கருங்காலி மோட்டை கிராம மக்களைநேரில்சந்தித்துஅவர்களுடைய குறைகளை கேட்டறிந்தார்

குறிப்பாக கருங்காலி மோட்டை பகுதியில் அரச காணியாக அடையாளப்படுத்தும் சில இடங்களில் சிலர் உறுதி வைத்திருப்பதாக தெரிவிப்பதையும் இதை கவனத்துக்கு எடுத்துக் கொண்ட மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் குறித்த காணிப்பகுதியை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாந்தை மேற்கு பிரதேச செயலாளரை வேண்டியுள்ளார்.

இதன் அறிக்கை கிடைத்தபின் அரச காணிகளாக இவை அடையாளம் காணப்படும் பட்சத்தில காணி இல்லாதவர்களுக்கும் வாழ்வாதாரம் தேவைப்படுபவர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் மக்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்

# மாற்றுத் திறனாளிகளுக்கு 3 வீத தொழில் மாகாண பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமலை ராஜ்குமார்)




மாற்றுத் திறனாளிகளுக்கு 3 வீதம் தொழில் வாய்ப்பு வழங்கும் சட்டத்தை அரச மற்றும் தனியார் துறைகளில் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் என கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் திருமதி. என். பிள்ளைநாயகம் தொிவித்தார்.

நவஜீவன நிறுவனம் மற்றும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து விசேட கல்வி மாணவர்களின் கல்வியை மேம்படுத்த ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கும் நிகழ்வு திருகோணமலை சர்வோதய வள நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் என்.பிள்ளைநாயகம் மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர் விசேட கல்விப் பிரிவு தர்மசிறி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.அத்துடன் அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த கல்வித் திணைக்கள அதிகாரிகள் மாற்றுத் திறனாளிகள் சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது தொடர்ந்து உரையாற்றிய மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் மாற்றுத் திறன் மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் தொழிற் கல்வியை அதிகமாக இணைக்க வேண்டும். அவை அவர்கள் தமது எதிர்காலத்தில் இன்னொருவரில் தங்கியிருக்காமல் சுயசார்பு உடையவர்களாக்கும்.அத்துடன் மாற்றுத் திறனுடைய பெண் மாணவர்கள் தொடர்ச்சியாக கற்று நிறைவு செய்யாமல் இடைவிலகல் அதிகமாக காணப்படுகிறது. அதற்கு பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம் என தெரிவித்தார். அத்துடன் பின்வரும் வடயங்களைஉள்ளடக்கிய விதத்தில் இத்திட்டமிடல் அமைந்திருந்தது.

விசேட கல்வி தேவையுடைய மாணவர்களின் கல்விக்கான தகவல் செயன்முறை தொடர்பான ஏற்பாடுகளை மேம்படுத்தல், கல்வியை மேம்படுத்தும் வகையில் பௌதீக வளங்களைவிருத்தி செய்தல், பாடசாலை மட்டக்கொள்கையை உருவாக்கல் தனியார்மைய நிகழ்ச்சித்திட்டம், கல்வியை மேம்படுத்தும் வகையில் நிலைமாற்றல் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தல், மகிழ்ச்சிகரமான ஆளிடைத் தொடர்பை ஏற்படுத்தல், பங்குதாரரிடையே அறிவு திறன் மனப்பாங்கை மேம்படுத்துதல்.போன்ற பல விடயங்கள் இதன் போது திட்டமிடப்பட்டமை குறிப்பித்தக்கது.

# கொள்கலன் வாகனமொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் மீட்பு

( எப்.முபாரக் )

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எரிபொருள் ஏற்றுவதற்காக சென்ற கொள்கலன் வாகனமொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் மீட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் எரிபொருள் ஏற்றுவதற்காக சென்ற கொள்கலன் வாகனமொன்றே இவ்வாறு குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாரதி நித்திரை கலக்கத்தினால் கந்தளாய் குளத்தினை அண்டிய பகுதியிலுள்ள தொலைபேசி கம்பத்தில் மோதி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT




# அதிபர்கள் அகப்பார்வையுள்ள தலைவர்களாக இருக்கவேண்டும்

**வி.ரி.சகாதேவராஜா**





அதிபர்கள் சிறந்த முகாமையாளராக(Manager) இருந்தால் மட்டும் போதாது. மாறாக, சிறந்த அகப் பார்வையுள்ள நல்ல தலைவர்களாக (Visionary Leader)அதிபர்கள் இருக்கவேண்டும்.அப்போதுதான் பாடசாலைகள் அபிவிருத்திகாணும்.மாணவர் சிறந்த அடைவை எய்துவர்.

இவ்வாறு , சம்மாந்துறை வலய கல்விசார் உத்தியோகத்தர்கள் ,அதிபர்கள் மத்தியில் உரையாற்றிய கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எ.எம். ஜவாட் தெரிவித்தார்.

ஆசிரியரிடத்தில் விதைத்தால் மாணவர்களிடத்தில் விளையும் 'என்பது உண்மை என்றார்.

சம்மாந்துறைவலயத்திற்கான சூழ்நிலைப் பகுப்பாய்வுக்கூட்டம், நேற்றுமுன்தினம்(27) புதன்கிழமை சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் சுகாதாரநடைமுறைக்கமைவாக வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல்நஜீம் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்திற்கான கிழக்கு மாகாண மேலதிக மாகாணகல்விப்பணிப்பாளர் எ.எம்.ஜவாட் மற்றும் கல்வி அபிவிருத்திக்குப்பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.நிமலரஞ்சன் உள்ளிட்ட மாகாண கல்விப்பணிமனையின் கல்விஅதிகாரிகள் சமுகமளித்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் க.பொ.த. சாதாரணதர பரீட்சைஅடைவுமட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு பலவேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும் கிழக்குமாகாண கல்வித்திணைக்களம், அதன் ஓரங்கமாக வலயரீதியான சூழ்நிலைப் பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள கிழக்குமாகாண கல்வி உயர்கல்வி அதிகாரிகள்குழாத்தினர்சம்மாந்துறை வலயத்திற்கு நேரடியாக விஜயம்செய்தனர்.

அங்கு ,சம்மாந்துறை வலய கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் எ.எல்.எ.மஜீட் வலயபகுப்பாய்வு அறிக்கையை பல்லூடக பொறியினூடக காட்சிப்படுத்தி விரிவாக எடுத்துரைத்தார்.

அங்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ஜவாட் மேலும் உரையாற்றுகையில்:

கடந்த ஒன்றரை வருடகாலமாக இலங்கையில் மட்டுமலல உலகெங்கிலும் கொரோனா கல்வியை சீர்குலையவைத்துள்ளது. எனவே இப்போது குவிமையமாக இருப்பது இழந்த கல்வியை மீட்பதாகும்.

எமது மாகாணத்திலுள்ள 17கல்வி வலயங்களுக்கும் க.பொ.த.சா.தர அடைவு மட்டம் முன்னேற்றுவது தொடர்பில் இது மூன்றாவது சுற்றுவட்டத்தின் முதலாவது விஜயம்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளை மீள இயக்குவதில் அதிபர்களின் பங்கு அத்தியாவசியமாகின்றது. அதிபர் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர் என்பார்கள். அதிபர் நினைத்தால் அந்த சமுதாயத்தையே மாற்றலாம்.

நெப்போலியன் சொன்னவிடயம் ஞாபகத்திற்கு வருகிறது. எந்தவொரு வேலைத்திட்டமென்றாலும் அதனை முதலில் நான் பாடசாலையிலேயே பரீட்சித்துப் பார்ப்பேன் என்றார். ஆம் பாடசாலை ஒரு பரீட்சார்த்த களம்.

சிங்கப்பூரைமாற்றியமைத்த தலைவர் லீகுவான்யு, மலேசியாவை மாற்றியமைத்த தலைவர் மகதிர்மொகமட். இவர்களெல்லாம் சிறந்த அகப்பார்வையுள்ள தலைவர்களாகவிரந்தார்கள். எனவே சிறந்ததொரு பாடசாலையை கட்டியெழுப்பவேண்டுமெனின் அதிபர்கள் அகப்பார்வையுள்ள தலைவர்களாக இருக்கவேண்டும்.

நாம் எப்போதும் பொறுப்புக்கூறுவதற்கும்( Responsiblity), வகைகூறுவதற்கும்(Accountablity) தயாராகவிருக்கவேண்டும். அதிபர்கள் பெறுபேற்றுமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதற்கு போதனாதலைமைத்துவம் இன்றியமையாதது.

நம்முன் உள்ள சவால்கள் அனைத்தையும் நல்ல சந்தர்ப்பங்களாக கருதி மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். மாணவர்களை வழிப்படுத்தி ஊக்கப்படுத்தவேண்டும். எனவே சிறந்த அதிபர்களாக பாடசாலையையும் சமுகத்தையும் கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும். என்றார்.

# உள்ளூராட்சி சான்றிதழ் பயிற்சி நெறியில் தவிசாளர் ஜெயசிறில் சிறப்பு சித்தி

**வி.ரி.சகாதேவராஜா**



இலங்கை பொதுநிருவாக உள்நாட்டு மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் நடாத்திய, உள்ளூராட்சி சான்றிதழ் பயிற்சிநெறியை காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் சிறப்புச்சித்தி பெற்று பூர்த்திசெய்துள்ளார்.இந்த சான்றிதழ் பாடநெறி கொழும்பில் கடந்த 2019பெப்பருவரி மாதம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட உள்ளூராட்சி மன்றத்தலைவர்களில் பலர் சித்திபெற்றுள்ளனர்.

நேற்று, அப்பரீட்சையின்பெறுபேறு வெளியிடப்பட்டது.

இலங்கை பொதுநிருவாக உள்ளூராட்சி மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாரும் நிறுவனத்தின் தலைவருமான ஜே.ஜே. ரத்னசிறி ஒப்பமிட்டு சான்றிதழை வழங்கியுள்ளார்.

# பங்காளி கட்சிகளுக்குள் எழுந்துள்ள சலசலப்புகளினால் அரசாங்கம் கழிந்துவிடும் என்று நினைக்க கூடாது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



**நூருல் ஹுதா உமர்**

நீண்டகாலமாக இழுபறியில் இருந்துவரும் ஒலுவில் துறைமுக விவகாரம் தொடர்பில் ஆராய ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா புதன்கிழமை கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட கடற்தொழில் காரியாலயத்தில் மீனவர்களை சந்தித்து கலந்துரையாடியதுடன் ஒலுவில் துறைமுக வளாகத்தையும் பார்வையிட்டார். அதன்போது துறைமுக குளிர்சாதன வசதிகள் மேம்பாடு, மீன் சந்தைப்படுத்தல் வசதிகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இந்த விஜயத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி, பிரதமர் எள்ளென்றால் நான் எண்ணெயாக இருந்து அம்பாறை மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பேன். கடந்த தேர்தல் காலங்களில் இந்த அரசின் தலைவர்களினால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளை என்னால் முடிந்தவரை நிறைவேற்ற தயாராக உள்ளேன். இந்த ஒலுவில் துறைமுக விவகாரம் தொடர்பில் பலரும் கரிசனை கொண்டு என்னிடமும், ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்தவுடனும் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்கள். இந்த ஒலுவில் துறைமுக விவகாரம் தொடர்பில் தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா எம்.பியும் கரிசனைகொண்டு என்னிடமும், ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்தவுடனும் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

மீனவர்கள் இன்று என்னை சந்தித்து முன்வைத்த நீண்டகால பிரச்சினைகளை நான் கூடிய விரைவில் தீர்த்து வைக்க தயாராக உள்ளேன். மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து யாருக்கும் பயப்பட தேவையில்லை. மீனவர்களுக்கு தேவையாக உள்ள ஒலுவில் துறைமுகம் யாருக்கும், எப்பகுதியினருக்கும் பாதில்லாத வகையில் சகலருடனும் கலந்துரையாடி எவ்வித பிரச்சினைகளுமின்றி பேசி முடிக்கப்பட்டு விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசின் பங்காளி கட்சிகளுக்குள் எழுந்துள்ள சலசலப்புகள் உலக அரசியலில் வழமையானது. இதனால் அரசாங்கம் கழிந்துவிடும் என்று நினைக்க கூடாது என்றார்.

இந்நிகழ்வுகளில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், அட்டாளைசேனை பிரதேச செயலாளர், கடற்தொழில் திணைக்கள பயிற்சி மற்றும் விசாரணைப்பிரிவின் பணிப்பாளர் எம்.ஜி. என். ஜெயக்கொடி, கடற்தொழில் திணைக்கள மாவட்ட உதவிப்பணிப்பாளர் நடராஜா ஸ்ரீரஞ்சன், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, பொலிஸார், கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், இலங்கை கடற்படை அதிகாரிகள், கடற்தொழில் திணைக்கள உயரதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மீனவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### திருக்கோவில் பிரதேசத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம்

அம்பாரை மாவட்டத்திற்கு வியஜமொன்றினை மேற்கொண்டு இருந்த கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருக்கோவில் பிரதேசத்திற்கும் அவசர வியஜம் ஒன்றினை மேற்கொண்டு பிரதேசத்தின் கடலரிப்பின் பாதிப்புக்கள் தொடர்பாகவும் பார்வையிட்டு இருந்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் சபையின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினரும் பிரதேச இணைப்பாருமான கே.அரியநாயகத்தின் அழைப்பின் பேரில் அமைச்சர் அவர்கள் அவசர வியஜம் ஒன்றினை புதன்கிழமை பிற்பகல் வேளையில் திருக்கோவில் பிரதேசத்திற்கு மேற்கொண்டு இருந்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் கடலரிப்பின் பாதிப்பு தொடர்பாக திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன் மற்றும் பிரதேச இணைப்பாளரினால் விளக்கங்கள் அமைச்சருக்கு வழங்கப்பட்டு இருந்ததுடன் இவ் கடலரிப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறிச் சென்று இருந்தார்.

இதே வேளை திருக்கோவில் பிரதேச மீன்பிடி சங்க அமைப்புக்களினால் மினவ குடும்பங்களின் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளும் மீன்பிடிச் சங்க நிருவாகிகளால் அமைச்சரிடம் நேரடியாக வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் 36 பயனாளிகளுக்கான தையல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சாலியபுர கிராமம் பன்சார் அபிவிருத்தி சார் கிராமமாக அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

அதற்கிணங்க தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கான தையல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு (26) தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

இதற்காக 5 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் செலவிடப்பட்டுள்ளது.உற்பத்திசார் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பதி,தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி சிறீபதி, தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார , பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ஒரே நாடு ஒரே சட்டம் சட்ட மூலமாகும் போது 20 க்கு கை உயர்த்தியோர் அதற்கும் கை உயர்த்துவர்:இம்ரான் எம்.பி



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

ஒரே நாடு ஒரே சட்டம் இந்நாட்டில் சட்ட மூலமாகும் போது 20 க்கு கை உயர்த்தியோர் அதற்கும் கை உயர்த்துவர் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடைசி நிமிடம் வரை ஐக்கிய மக்கள் சக்தியோடு கூடிக்குலாவி ஒற்றுமையாக இருந்தவர்கள் திடீரென அந்தக் கட்சியின் நம்பிக்கைக்கும் முஸ்லிம் சமுகத்தின் நம்பிக்கைக்கும் துரோகம் செய்து 20 க்கு கை உயர்த்தினார்கள். இதன் மூலம் சமுகத்திற்கு இதுவரை அவர்கள் பெற்றுக் கொடுத்ததென்ன என்று கேட்க விரும்புகின்றேன்.

20க்கு வாக்களித்ததன் மூலம் இப்போது அரசின் பக்கம் தானே இவர்கள் உள்ளார்கள். அந்தப் பக்கத்தில் இருந்து தானே முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன.

முஸ்லிம் தனியார் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். காதி நீதிமன்றத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்தார்கள். மத்ரசாக்களை மூட முன்னின்றார்கள். உலமாசபைக்கு எதிராக கருத்துக்களை முன் வைத்து அதனைக் கலைக்க வேண்டுமென்றார்கள். இவை போன்ற பல பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகளுக்கு இவர்கள் என்ன தீர்வைப் பெற்றுத் தந்தார்கள்.

ஞானசார தேரர் தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை முன் வைத்து வருகின்றார். இவர்கள் 20 க்கு கை உயர்த்தி அதிகாரம் பெற்றுக் கொடுத்த ஜனாதிபதியிடம் அது குறித்துப் பேசி அவரது முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோடு அல்லது அவர்கள் முற்று முழுதாக நம்பிக்கை வைத்திருக்கும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸவோடு பேசி முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களுக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கலாம்.இவை எதனையும் அவர்கள் செய்யவில்லை. இதன் மூலம் நடந்தது என்ன?

இவர்கள் யாருக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாக படம் காட்டினார்களோ அவர்தான் இன்று ஒரேநாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர். இப்போது இவர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள். இது தொடர்பாக யாரிடம் முறைப்பாடு செய்யப் போகின்றார்கள் என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.ஞானசேர தேரரின் பொதுபலசேனா அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் காரியாலயத்தை திறந்து வைத்தவர் அப்போது பாதுகாப்பு அமைச்சு செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஸ என்ற பகிரங்கமான விடயம் இவர்களுக்கு தெரியாத விடயமா?

இப்போது இதே ஞானசார தேரர் தான் ஒரேநாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின்தலைவர். முன்பொரு தடவை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சொன்னது போல கண்ணைத் திறந்து கொண்டு குழியில் விழுந்தவர்கள் தான் 20க்கு கை உர்த்தியோர்.

இவர்களுக்கு தேவையானவை வழங்கப்பட்டாகி விட்டது. இதனால் தான் அரசின் முக்கிய விடயங்களில் இப்போது இவர்கள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றார்கள். இருப்பினும் இது அவர்களுக்குப் பிரச்சினையாகத் தெரியவில்லை.

# MATHE BILDUNGSZENTRUM

# கணித கற்கைநெறி மையம்

MBZ

**கல்வியே துணை**

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

**Mathe மகேந்திரா**-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

**Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung**
**BMS, HMS, FMS, Gymi Probe**

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

**Oerlikon, Uster, Schaffhausen**